<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 411/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1<br>Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயராஜ் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : தங்கையா | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 11.05.2023.

**<u>( முதல் விசாரணை ):</u>**

1. நான் உடுமலையில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். 28.8.2019 ம் தேதி நான் ஆண்டிப்பட்டியில் வேலையில் இருந்தபோது எனது தங்கை அமராவதி உடுமலை– பொள்ளாச்சி ரோட்டில் விகாசினி காயர்ஸ் மட்டை மில்லுக்கு வேலைக்கு சென்றபோது அன்று காலை 11.00 மணிக்கு அங்கு வேலை செய்யும் கற்பகம் என்பவர் எனக்கு போன் செய்து மட்டை அறைக்கும் மிஷினில் என் தங்கையின் கை சிக்கி இடது கை கடுமையான காயம் ஏற்பட்டுள்ளது என்று சொன்னதன் பேரில் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அங்கு முடியாது என்று சொன்னதால் கோவை கங்கா மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்கு சேர்த்தேன்.

2. மேற்படி எனது தங்கைக்கு இடது கை முழுவதும் அறுவை சிகிச்சை செய்து எடுத்துவிட்டார்கள். மேற்படி விபத்து ஏற்பட்டபோது மிஷினை நிறுத்துவதற்கான சுவிட் தூரமாக இருந்ததால் வேறு ஒரு நபர் சென்று Stop பட்டனை நிறுத்தும் வரை மேற்படி மிஷினில் என் தங்கை கை சிகிச்சை சேதாரம் ஏற்பட்டது என்றும் மேற்படி மில் உரிமையாளர் மில்லில்

உரிய பாதுகாப்பு முன் ஏற்பாடுகள் செய்யாததால் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் கூறினார்கள். இது சம்பந்தமாக உடுமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 411/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2<br>Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அமராவதி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : முருகன் | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 11.05.2023.

**( முதல் விசாரணை ):**

1. நான் பெரியகோட்டை பிரிவில் வசித்து வருகிறேன். தற்போது வீட்டில் தான் உள்ளேன். உடுமலை பொள்ளாச்சி ரோட்டில் உள்ள விகாஷ்னி காயர்ஸ் என்ற மட்டை மில்லில் 28.8.2019 அன்று வேலைக்கு சென்று பணியில் இருந்தபோது காலை 11.00 மணிக்கு மிஷினில் மட்டையை எடுத்து வைத்துக்கொண்டிருந்தபோது மிஷினுக்குள் கை சிக்கிக்கொ்ண்டதால் அய்யோ,அம்மா என்று கத்தினேன். பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்து மிஷினை நிறுத்திவிட்டு என் கையை வெளியே எடுத்தார்கள். மிஷினுக்கு பக்கத்தில் மிஷினை நிறுத்துவற்கு சுவிட் எதுவும் இல்லை. கையை வெளியே எடுத்த உடன் நான் மயக்கமாகி விட்டேன். உடுமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு வந்தார்கள். பின்பு மேல் சிகிச்சைக்கு கோவை கங்கா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றேன்.

2. மேற்படி சிகிச்சையின்போது எனது பகுதி இடது கையை அறுவை சிகிச்சை மூலம் அகற்றிவிட்டார்கள். மேற்படி விபத்திற்கான காரணம் நான் மிஷினில் கை வைத்ததும் அதை நிறுத்துவதற்கு பக்கத்தில் சுவிட்

இல்லாததால் மிஷினை நிறுத்த முடியவில்லை. எனவே மேற்படி மில்லின் உரிமையாளர் வேலை செய்வதற்கு தகுந்த பாதுகாப்பு ஏற்பாடு எதுவும் செய்யவில்லை அதனால் தான் இந்த விபத்து ஏற்பட்டது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 411/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.3<br>Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 11.05.2023.

**( முதல் விசாரணை ):**

நான் பெரியகோட்டை பிரிவில் வசித்து வருகிறேன். டிரைவாக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் அடிப்பட்டவர் எனது மனைவி ஆவார்.உடுமலை பொள்ளாச்சி ரோட்டில் உள்ள விகாஷ்னி காயர்ஸ் என்ற மட்டை மில்லில் 28.8.2019 அன்று என் மனைவி வேலைக்கு சென்று பணியில் இருந்தபோது காலை 11.00 மணிக்கு மிஷினில் மட்டையை எடுத்து வைத்துக்கொண்டிருந்தபோது மிஷினுக்குள் கை சிக்கிக்கொண்டதாக கற்பகம் என்பவர் எனக்கு போன் செய்து சொன்னார் பின்பு உடுமலை அரசு மருத்துவமனைக்கு என் மனைவியை சிகிச்சைக்கு கொண்டு வந்தார்கள். முதலுதவி சிகிச்சை அளித்து பின்பு மேல் சிகிச்சைக்கு கோவை கங்கா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு

சிகிச்சை பெற்றார் இடது கையின் முழங்கைக்கு கீழே அறுவை சிகிச்சை செய்து எடுத்துவிட்டார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.